3. அவையுரிமைக் கேள்வி—திரு. சி. சுப்பிரமணியம் மீதும், 'இந்து' பத்திரிகை மீதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. சி. சுப்பிர மணியம் அவர்கள் மீதும், 'இந்து' பத்திரிகை மீதும் உறுப்பினர் திரு. இரெ. இளம்வழுதி அவர்கள் கொண்டுவந்துள்ள அவை உரிமைக் கேள்வியும் (ப்ரிவிலேஜ் மோஷன்), மாண்புமிகு எதிர்க் கட்சித்தலைவர் அவர்கள் கோவை நிகழ்ச்சியைப்பற்றிக் கொண்டு வந்துள்ள ஒற்றிவைப்புத் தீர்மானமும், எதிர்க் கட்சித் தலைவர், அவையின் முன்னவர் ஆகியோருடைய ஒப்புதலுடன் 16—2—1968 வரை தள்ளி வைக்கப்படுகின்றன.

4. ஆளுநரின் பேருரைமீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் அவர்களின் பேருரையின் மீதான விவாதத்திற்கு அலுவல் ஆய்வுக் குழுவினால் ஒதுக்கப்பட்ட நேரம் பங்கீடு செய்யப்பட்டு, இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆளும் கட்சியைத் தவிர, ஏனைய கட்சி களுக்கு அவரவர்களுடைய எண்ணிக்கையின் அடிப்படையிலே எவ்வளவு நேரத்திற்கு உரிமை உண்டு என்று கணக்குப் போட்டு, அந்த நேரத்தை அதிகரித்து, அதாவது, 50 சத விதம், பாதி அளவு நேரத்துடன் கூட்டி, நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி ஒதுக்கப்பட்ட நேரத்தில் இதுவரையில் அந்தந்தக் கட்சியினர் உரையாற்றிய நேரம் என்னிடமுள்ள கணக்கில் இருக் கிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நேரம் அந்தக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

திராவிட முன்னேற்றக் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட நேரம்—7 மணி.

இதுவரையில் உரையாற்றிய நேரம்—1 மணி 4 நிமிடம்.

காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட நேரம்—4 மணி.

இதுவரையில் எடுத்துக்கொண்ட நேரம்—42 நிமிடம்.

சுதந்திரா கட்சிக்கு ஒதுக்கப்பட்ட நேரம்—2 மணி.

இதுவரையில் எடுத்துக்கொண்ட நேரம்—34 நிமிடம்.

இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சிக்கு ஒதுக்கப்பட்ட நேரம்—1 மணி.

இதுவரையில் எடுத்துக்கொண்ட நேரம்—44 நிமிடம்.

மற்றவர்களைப்பற்றிக் குறிப்பிட வேண்டியதில்லை. அவர்கள் இன்னும் பேசவில்லை. எனவே இன்றைய விவாதத்தில் பங்கு கொள்கிற உறுப்பினர்கள் 10 நிமிடம் என்ற காலவரையறைக்குள் உரையாற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் சபாநாயகர் அவர்களே, ஒதுக்கப்பட்ட நேரத்தைப்பற்றி தாங்கள் குறிப்பிட்டிருப்பதில் ஒரு விளக்கம் தேவையாக இருக்கிறது. இந்தச் சட்டசபையில் எதிர்க்கட்சியிலே இருப்பது காங்கிரஸ் கட்சி ஒன்றுதான். ஏனைய